Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்**.90/2021

Depositions of : PW11 (LW13)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | தொழில் | : | முறம் வியாபாரம் |
| தந்தை பெயர் | : | காகாயன் | முகவரி | : | எண். 125/8, 5 வது தெரு, கலைஞர் நகர், கோவில்பதாகை, ஆவடி |
| வயது | : | 52 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். முறம் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அவரை நான் பார்த்ததில்லை. இன்றிலிருந்து சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் திருமுல்லைவாயில் முருகப்பா பாலிடெக்னிக் அருகே மீன் கடை போட்டிருந்த போது பகல் 12.00–1.00 மணி அளவில் ஒரு போலீஸ் அங்கு வந்து யாரை கேட்டு கடை போட்டாய் போலீஸ்டேசனுக்கு வா என்று அழைத்து போய் எனது பெயர், முகவரியை எழுதிக்கொண்டு ஒரு கையொப்பம் போட சொன்னார்கள். போலிசார் கேட்டதால் எனது கையொப்பத்தை போட்டேன். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாகஉள்ள ஏழுமலை என்கிற கையொப்பம்

என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகும். நான் கையொப்பம் போட்ட போது அந்த தாளில் ஏதேனும் எழுதப்பட்டிருந்ததா என்பது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும் அப்போது கடந்த 24.11.2019 அன்று சுமார் 2.00 மணியளவில் நான் கடையில் இருந்த போது முருகப்பா பாலிடெக்னிக் பஸ் ஸ்டாப்பிற்கு அருகே போலிசார் ஒரு பெண்ணை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் நான் அருகில் சென்று பார்த்த போது என்னையும் பாண்டி என்பவரையும் சாட்சியாக இருக்க கேட்டு நாங்கள் ஒப்பு கொள்ளவே எங்கள் முன்னிலையில் ஆஜர் எதிரி ஆசா ராணி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும் அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.**90/2021

Depositions of : PW12 (LW14)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயா | தொழில் | : | அரசுபணி உதவியாளர் |
| தந்தை பெயர் | : | வெங்கடேசன் | முகவரி | : | எண். 613, 13 வது பிளாக், கே.பி பார்க், புளியம்தோப்பு |
| வயது | : | 29 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை=**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அரசு அலுவலகத்தில் உதவியாளராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.11.2019 அன்று நான் எனது அம்மா வீட்டில் இருந்த போது காலை 8. 00 மணியளவில் எனது கணவரின் சகோதரி போன் செய்து எனது கணவரை கொலுத்திவிட்டார்கள் என்று சொன்னார். உடனே நானும், எனது அம்மாவும் குழந்தையுடன் கே.எம்.சி மருத்துவமனைக்கு போய் என் கணவரை பார்த்தோம். அப்போது என் கணவர் என்னிடம் உங்களை விட்டதற்கு எனக்கு தண்டனை கிடைத்துவிட்டது. ஆஷா என்னை கொளுத்தி விட்டாள் என்று சொன்னார். பிறகு என் கணவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார். போலிசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரித்தனர். போலிசாரிடமும் மேற்கண்டவாறு சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

விவாகரத்து வழக்கை என் கணவர் தான் என் மீது போட்டார். சம்பவம் நடந்த சமயத்தில் விவாகரத்து வழக்கு நடந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். நான் சம்பவத்திற்கு முன்பிருந்தே எனது தாயார் வீட்டில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். நாங்கள் 2 வருடங்களாக பிரிந்திருந்தோம். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். மகனை நான் வளர்த்து வந்தேன். என் மகளை என் கணவர் வளர்த்து வந்தார். என் கணவரின் நடத்தை சரியில்லை என்று தான் நான் தனியாக வந்துவிட்டேன் என்றால், எதிரியோடு என் கணவருக்கு தொடர்பிருந்ததால் தனியாக வந்துவிட்டேன். போலிஸ் விசாரணையில் இந்த விவரத்தை சொல்லியுள்ளேன். என் கணவர் என்னோடு இருந்த போது தற்கொலைக்கு முயற்சி செய்து புளியந்தோப்பு முத்து மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் அடிக்கடி என்னிடம் தான் தற்கொலை செய்து போவதாக சொன்னார் என்றால் இல்லை. நான் மருத்துவமனையில் போய் பார்த்த போது என் கணவர் சாதாரண வார்டில் தான் இருந்தார். நான் என் மருத்துவமனையில் கணவரிடம் பேசிய போது அவரிடம் இருந்து பெட்ரோல் வாசனை வந்தது. நான் போவதற்கு முன்பே போலிசார் அங்கு இருந்தனர். என்னை விட்டு பிரிந்த பிறகு என் கணவரிடம் என் மகளை கேட்டு பிரச்சனை செய்து வந்ததால் அவர் மன உலைச்சலில் இருந்தார் என்றால் சரியல்ல. எங்களது விவாகரத்து வழக்கு எனது சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வந்தது என்றால் சரிதான். என் கணவர் விவாகரத்து கேட்டும் நான் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்ததால் அவர் மன உலைச்சலில் இருந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் ஆவடி போலீஸ் குடியிருப்பில் இருந்துவந்தார். என் கணவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகளை போலீஸ் குடியிருப்புக்கு போய் பார்த்து வருவேன். மருத்துவமனையில் நான் என் கணவரை பார்த்த போது அவருக்கு உடல் முழுவதும் காயம் இருந்தது. நான் அவரை பார்த்த போது அவருடைய அக்காவும் உடன் இருந்தார். இந்த விவரதை போலிசாரிடமும் சொல்லியுள்ளேன்.

மறுவிசாரணை இல்லை.